


பெரிய ரத்தக்குழாய் வீக்கம் மற்றும் நவீன சிகிச்சை பற்றிய மாநாடு குறித்து மியாட் ஆஸ்பத்திரியின் நிர்வாக இயக்குனர் டாக்டர் பி.வி.ஏ.மோகன்தாஸ், இருதய அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் வி.வி.பாஷி ஆகியோர் பேட்டி அளித்தபோது எடுத்தபடம். அருகில் மியாட் ஆஸ்பத்திரியின் தலைவர் மல்லிகா மோகன் தாஸ் மற்றும் வெளிநாட்டு மருத்துவ நிபுணர்கள் உள்ளனர்.

### சென்னை மியாட் ஆஸ்பத்திரியில்

# பெரிய ரத்தக்குழாய் வீக்கம், நவீன சிகிச்சை பற்றிய சர்வதேச மாநாடு

## இன்றும், நாளையும் நடக்கிறது

சென்னை, ஜன.11–

சென்னை மியாட் ஆஸ்பத்திரியில் பெரிய ரத்தக்குழாய் வீக்கம் மற்றும் அதற்கான நவீன அறுவை சிகிச்சை பற்றிய சர்வதேச மாநாடு இன்றும் (வெள்ளிக்கிழமை) நாளையும் (சனிக்கிழமை) நடக்கிறது.

சென்னை மணப்பாக்கத்தில் உள்ள மியாட் ஆஸ்பத்திரியின் நிர்வாக இயக்குனர் டாக்டர் பி.வி.ஏ.மோகன்தாஸ், இருதய அறுவை சிகிச்சை இயக்குனர் டாக்டர் வி.வி.பாஷி ஆகியோர் நிருபர்களிடம் கூறியதாவது:–

### சர்வதேச மாநாடு

மனித உடலில் உள்ள பெரிய ரத்தக்குழாய் பெரிய தமனி என்றழைக்கப்படுகிறது. இந்த பெரிய ரத்தக்குழாயில் ஏற்படும் வீக்கம் தான் அயாடிக் அன்யூரிஸம் என்று அழைக்கப்படுகிறது. இந்த வீக்கம் நாளடைவில் வெடித்து சிதறும். அவ்வாறு சிதறினால் உடனடியாக ரத்தம் மற்ற உறுப்புகளுக்குள் பாய்ந்து உடனடியாக மரணம் ஏற்படும்.

ரத்தக்குழாயை நவீன முறையில் அறுவை சிகிச்சை செய்வது குறித்த சர்வதேச அளவிலான மாநாடு மியாட் ஆஸ்பத்திரியில் இன்றும் (வெள்ளிக்கிழமை) நாளையும் (சனிக்கிழமை) நடக்கிறது. இந்த மாநாட்டில் இந்தியா மற்றும் இத்தாலி, ஜெர்மனி, நியூசிலாந்து, சிங்கப்பூர் உள்ளிட்ட வெளிநாடுகளில் இருந்து 200–க்கும் மேற்பட்ட டாக்டர்கள் கலந்துகொள்கிறார்கள்.

பெரிய ரத்தக்குழாய் வீக்கம், நோய் மார்பு, வயிறு உள்பட உடலில் எந்த பாகத்திலும் ஏற்படும். பெரும்பாலும் வயதானவர்களுக்கு வரும். சிகரெட் பிடித்தல், உடல் பருமன் உள்ளவர்கள், உயர் ரத்த அழுத்தம் உள்ளவர்களுக்கும் வர வாய்ப்பு உள்ளது. மரபு வழி காரணமாக குழந்தைகளுக்கு வரலாம். ஆனால் வந்துவிட்டால் அது உடையும் நிலைக்கு செல்லும் முன்பே அறுவை சிகிச்சை செய்வது நல்லது.

அது உடைந்துவிட்டால் உயிருக்கே ஆபத்தாக முடியும்.

### நவீன சிகிச்சை

இந்த பெரிய ரத்தக்குழாய் வீக்கம் அடைந்து மட்டும் இந்தியாவில் 6 லட்சம் முதல் 7 லட்சம் வரை உள்ளனர். இந்த நோய் உள்ளவர்களுக்கு மார்பு வலி அல்லது வயிற்று வலி ஏற்படலாம். ஸ்கேன் எடுத்து பார்த்தால் இந்த பெருந்தமனி வீக்கம் தெரியும்.

இதற்கான தற்போதைய சிகிச்சை முறையில் நீண்ட நாட்கள் மருத்துவமனையில் தங்கி இருக்கவேண்டும். இருதயம்–நுரையீரல் எந்திரத்தை அறுவை சிகிச்சையின்போது பயன்படுத்த வேண்டும்.

ஆனால் 'என்டோ வாஸ்குலர் ஸ்டெண்டிங்' என்ற புதிய சிகிச்சை முறையில் அறுவை சிகிச்சை செய்யக்கூடிய உறுப்பை மட்டும் உணர்வில்லாத நிலைக்கு மயக்கமருந்து கொடுக்கப்படும். தொடையும் இடுப்பும் சேரும் இடத்தில் ஒரு சிறிய துவாரம் போட்டு பெரிய ரத்தக்குழாய் வீங்கிய பகுதியில் ஒரு ஒட்டுக்குழாய் (டியூப் கிராப்ட்) பொருத்தப்படும். அதனால் அந்த ரத்தக்குழாய் பாதுகாப்பாக இருக்கும். எந்த சூழ்நிலையிலும் உடையாது. இந்த நவீன சிகிச்சையால் நோயாளி ஆஸ்பத்திரியில் 3 நாட்கள் மட்டுமே தங்கி இருந்தால் போதும்.

இந்த நோய் மற்றும் நவீன சிகிச்சை முறை குறித்து மாநாட்டில் விவாதிக்கப்படும்.

இவ்வாறு டாக்டர்கள் பி.வி.ஏ.மோகன்தாஸ், வி.வி.பாஷி ஆகியோர் தெரிவித்தனர்.

### மல்லிகா மோகன்தாஸ்

மாநாட்டு ஏற்பாடுகளை மியாட் ஆஸ்பத்திரியின் தலைவர் மல்லிகா மோகன்தாஸ், மாநாட்டு அமைப்புச்செயலாளர் டாக்டர் கே.முரளி, இணைசெயலாளர் டாக்டர் கே.சிவகுமார் ஆகியோர் செய்துவருகிறார்கள்.